**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 13.11.2019–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : .11.2019 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் விவரங்கள் நாமக்கல், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது பரிந்துரையின்படி, நாளேடுகளின் தொழில்மலரில் வெளியிடப்பட்டு, அதற்கான பட்டியல்கள் கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1) | தினமணி | ரூ. 15750/– |
| 2) | தினத்தந்தி | ரூ. 17824/– |
| 3) | தினகரன் | ரூ. 9900/– |

மேற்கண்டுள்ள விளம்பரக் கட்டணங்களை செலுத்தவும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** விளம்பரக் கட்டணங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

(1896/19/இ1)

**தீர்மானம் எண். 652**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சி தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–2020– இன்கீழ் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் மாநில அளவில் கீழ்கண்டுள்ளவாறு வெளியிடப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1) | டெக்கான் கிரானிக்கல் | தமிழ்நாடு | ரூ. 34650/– |
| 2) | மாலை முரசு | தமிழ்நாடு | ரூ. 17500/– |
| | | | ரூ. 52150/– |
| | மாநில சரக்கு மற்றும் சேவை வரி 2.5 % | | ரூ. 1303.75 |
| | மத்திய சரக்கு மற்றும் சேவை வரி 2.5 % | | ரூ. 1303.75 |
| | | | ரூ. 54757.50 (அல்லது) 54758/– |

மேற்காணும் ரூ. 54758/– விளம்பரக் கட்டணம் ரவி பப்ளிசிட்டி சர்வீஸ், சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ரூ. 54758/– ரவி பப்ளிசிட்டி நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(497/19/இ1)

**தீர்மானம் எண். 653**

அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சி குடிநீர் விநியோக லாரிகள் TN 28 BZ 9021 மற்றும் TN 28 BZ 8975 ஆகிய வாகனங்களின் தகுதிச்சான்று **24.11.2019** தேதியுடன் முடிவடைகிறது. தகுதிச்சான்று பெற வாகன பழுதுகளை அசோக் லைலண்ட் நிறுவனமான சேலம் TVS பணிமனையில் பழுதுநீக்கம் செய்யவும், அதற்கான செலவினங்களை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குடிநீர் லாரிகள் TN 28 BZ 9021 மற்றும் TN 28 BZ 8975 தகுதிச்சான்று பெற வேண்டி செலுத்தப்பட வேண்டிய தொகையினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) குடிநீர் லாரிகளின் பழுதுகளை சேலம் TVS கம்பெனி நிறுவனத்தில் மேற்கொள்ளவும், தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) தகுதிச்சான்று பெற ஆகும் செலவினங்களுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
இ) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக பணிகளை மேற்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ2/2559/19)

**தீர்மானம் எண். 654**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனம், தினசரி மார்க்கெட் கடைகள் மற்றும் பழைய பேருந்து நிலையக் கடைகள் ஆகியவற்றிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக் கோர விளம்பரம் செய்தமைக்கு "Bright Advertising" நிறுவனத்திலிருந்து தொகை ரூ. **10016/–**க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகை வழங்குவதற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(அ2/1288/19)

**தீர்மானம் எண். 655**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– மா. கணேசன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி